[10th March 1969

திரு. என். ஆர். தியாகராஜன் : சம்பந்தப்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தர் தலைவர் காமராஜ் அவர்களை அணுகி இங்கே பொதுக்கூட்டம் நடத்துவது வழக்கம் இல்லை என்றோ அல்லது அங்குள்ள நிலையை விளக்கியோ கூறினாரா? இனிமேலாவது இது போன்ற சந்தர்ப்பங்களில் அப்படி நடைபெறாமல் தவிர்க்கப் படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கூட்டத்தில் சொற்பொழி வாற்ற இருந்தவர் தலைவர் காமராஜ் அவர்கள். அனுமதி கேட்டவர் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி அக்கம்மாதேவி. யார் அனுமதி கேட்டார்களோ, அவர்களிடத்தில் அந்த இடம் கூட்டம் நடத்துவதற்கு சரியான இடமல்ல என்று கூறப்பட்டது. வழக்கமாக அந்த நெடுஞ்சாலைக்கு ஒரு பர்லாங்குக்கு அப்பால் எப்போதும் கூட்டம் நடக்குமிடமான ஜகதாலா திடல் என்னுமிடத்தில் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு ஒப்புதல் அளித்தார்கள்.

Municipal Council, Virudhunagar.

* 157 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Communists caused chaos in the Municipal Council, Virudhunagar, recently;

(*b*) the loss of property due to this; and

(*c*) the action taken thereon by the Government ?

விருதுநகர் நகர சபை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) அண்மையில் விருதுநகர் நகர சபையில் கம்யூனிஸ்டுகள் கலகம் விளைவித்தனரா?

(இ) ஆமெனில், சொத்து சேதம் எவ்வளவு?

(உ) இதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 31—5—1968-ல் விருதுநகர் நகரசபையில் தொழிலாளர்களை வேலையினின்றும் நீக்குவது பற்றிய நிகழ்ச்சி குறித்து குழுமி யிருந்த தொழிலாளர்களிடையேயும், நகராட்சி உறுப்பினர் களிடையேயும் பிளவு ஏற்பட்டு வாய்ச் சண்டையிட்டுக் கொண் டார்களேயன்றி வேறு கலகம் நடைபெறவில்லை. சிலர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்ததால் கண்ணாடி சன்னலின் ஒரு பகுதியும் மரக்கதவின் ஒரு பகுதியும் சேதமடைந்தன. இதில் வெளியார் யாரும் ஈடுபடவில்லை. சேதத்தின் மதிப்பு ரூ. 8. வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை.